## மெட்ரோ ரயில் நிலையங்களில்

# வாக்குரிமை குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம்

■ சென்னை

மக்களவைத் தேர்தலையொட்டி வாக்குரிமை குறித்து மெட்ரோ ரயில், புறநகர் ரயில் நிலையங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப் படுகிறது.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் வரும் 18-ம் தேதி நடக்கவுள்ளது. இதற்கிடையே, 100சதவீத வாக்குப்பதிவு என்ற இலக்குடன் தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் தேர்தல் குறித்தும், வாக்குரிமை குறித்தும் பிரபலங்கள் பேசிய வீடியோக்களை திரையிட்டும், போஸ்டர்கள் ஒட்டியும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

பேருந்து, புறநகர் ரயில் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களிலும் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்களை கொண்ட 32 வகையான போஸ்டர்கள் ஒட்டப்பட்டு உள்ளன.

மேலும், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இணையதளத்திலும் வீடியோக்கள் திரையிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.